தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

<u>வழக்கு எண்.14384/விசாரணை/09</u>

<u>விசாரணை நாள் 24.09..2009</u>

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி., மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. எஸ். சின்னத்தம்பி<br>த/பெ. சித்தக்கவுண்டர்<br>செக்காரப்பட்டி, மாட்டுக்காரனூர் அஞ்சல்<br>ஓமலூர் தாலுகா<br>சேலம் மாவட்டம். |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>வட்டாட்சியர் அலுவலகம்<br>ஓமலூர்<br>சேலம் மாவட்டம். |

---

இவ்வாணையத்தில் இன்று (24.09.2009) நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு. எஸ். சின்னத்தம்பி அவர்களும், பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலருக்காக திரு. சி. ஜெயராமன், மண்டல துணை வட்டாட்சியர், ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகம், சேலம் அவர்களும் வந்திருந்தனர்.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் மனுதாரர் 08.02.08 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் அரசு நிதியுதவி பெறும் வேலாசாமி செட்டியார் மேல்நிலைப்பள்ளியின் டிரஸ்ட் சொத்துக்கள் சம்பந்தமாக எட்டு இனங்களுக்கு தகவல்கள் வழங்குமாறு விண்ணப்பித்திருந்தார். சட்டப்பிரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் தகவல் கிடைக்கப் பெறாததால், சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 15.5.08 அன்று முதல் மேல்முறையீடும், சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 29.06.09 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடும் செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு இன்றைய விசாரணைக்கு சட்டப்பிரிவு 18(3)ன் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வாணையம் ஏற்கனவே மனுதாரர் கோரிய எட்டு இனங்களுக்கும் தகவல்களை வழங்குமாறு 07.1.09 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு 23.1.09 அன்று வழங்கிய தகவலில் மேற்படி சொத்துகள் தொடர்பாக வழக்கு சேலம் விரைவு நீதிமன்றத்தில்

O.S.No.77/2008 மற்றும் O.S.No.211/2007 நிலுவையில் உள்ளதால் நீதிமன்ற வழக்கு முடிந்த பின்னரே மனு மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இன்றைய விசாரணையின் போது மனுதாரர் கோரிய எட்டு இனங்களுக்கும் பொதுத் தகவல் அலுவலர் சரியான தகவலை வழங்கவில்லையென்று இவ்வாணையம் கருதுகிறது. மேலும், பொதுத் தகவல் அலுவலர் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் தகவல் வழங்க இயலாது என்று சொல்வது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. மனுதாரர் கோரிய தகவலை வழங்குவதற்கு நீதிமன்ற தடையேதும் வழங்காததால், அவர் கோரிய எட்டு இனங்களுக்கும் அரசு ஆவணங்களில் உள்ளபடி முழுமையான, சரியான தகவலை மனுதாரருக்கு 30.9.09க்குள் வழங்கி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலை இவ்வாணையத்திற்கு 07.10.09க்குள் அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் மனுதாரருக்கு தகவல் வழங்காததற்காக பொதுத் தகவல் அலுவலர் மீது சட்டப்பிரிவு 20(1)ன் கீழ் ஏன் அதிகபட்சமாக ரூ.25,000/– அபராதம் விதிக்கக்கூடாது என்பதற்கும் சட்டப்பிரிவு 20(2)ன் கீழ் ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யக்கூடாது என்பதற்கும் உள்ள விளக்கத்தினை மாவட்ட ஆட்சியர், சேலம் அவர்களின் மூலமாக இவ்வாணை கிடைத்த ஒரு மாதத்திற்குள் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 06.10.2009
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவி பதிவாளர்.

**<u>வழக்கு எண்.14384/09</u>**
மாவட்ட ஆட்சித்தலைவர்
சேலம் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்
வட்டாட்சியர் அலுவலகம்
ஓமலூர், சேலம் மாவட்டம்.

திரு. எஸ். சின்னத்தம்பி
த/பெ. சித்தக்கவுண்டர்
செக்காரப்பட்டி, மாட்டுக்காரனூர் அஞ்சல்
ஓமலூர் தாலுகா,
சேலம் மாவட்டம்.